**வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்: 3516/ஆ4/ 2024, நாள்.09.05.2025**

– – –

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –மார்ச்–2025 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டமை –தோல்வியுற்ற மற்றும் தேர்விற்கு வருகை புரியாத மாணவ//மாணவிகளுக்கு – சிறப்பு வகுப்புகள் நடத்திட– ஜூன் –2025 சிறப்பு துணைத்தேர்விற்கு விண்ணப்பித்தல்–பள்ளிகளுக்கு தெரிவித்தல்–சார்பு

**=========**

மேற்காணும் பொருள் சார்ந்து மார்ச்–2025 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு முடிவுகள் கடந்த 08.05.2025 அன்று வெளியிடப்பட்டது .

எனவே வேலூர் மாவட்டத்தில் தோல்வியுற்ற மற்றும் தேர்விற்கு வருகை புரியாத மாணவ/மாணவிகளுக்கு –ஜூன் –2025 சிறப்பு துணைத்தேர்விற்கு 14.05.2025 அன்று முதல் 21.05.2025 வரை www.dge.tn.gov.in தங்கள் பள்ளிகளின் USER ID மற்றும் password கொண்டு விண்ணப்பித்திட அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் வேலூர் மாவட்டத்தில் மேல்நிலை இரண்டாமாண்டு மற்றும் மேல்நிலை முதலாமாண்டு (Arrear) பாடங்களில் தோல்வியுற்ற மற்றும் தேர்விற்கு வருகை புரியாத மாணவ/மாணவிகளுக்கு 12.05.2025 முதல் பாட ஆசிரியர்களை கொண்டு சிறப்பு வகுப்புகள் நடத்திடவும், மாணவர்கள் சிறப்பு வகுப்பிற்கு வருகை புரிவதை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Sheet –ல் ஒவ்வொரு நாளும் பதிவுகள் மேற்கொள்ள அனைத்து அரசு /நிதியுதவி /நகரவை /ஆதிதிராவிட நல மேல்நிலைப்பள்ளிகளின்தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :

1. Google Sheet Link
2. ஜூன் –2025 துணைத்தேர்வு கால அட்டவணை

**//ஓம். //**
**முதன்மைக் கல்வி அலுவலர்,(பொ)**
**வேலூர் .**

**பெறுநர்**

அரசு /நிதியுதவி /நகரவை /ஆதிதிராவிட நல / மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை ) அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது.